1972 ஏப்ரல் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை

(இ) இக் கேள்வி எழவில்லை.

இருத்திபட்–மங்கசால் சாலை

*897 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்கா மூனுநாடு பொதுமக்களிடமிருந்து, இருத்திபட்-மங்கசால் பாதையை மெட்டல் பாவி தார் போடும்படி கோரி 25-5-71-ஆம் நாளிட்ட முறையீடு ஒன்று வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

சைக்கிள் வரி ரத்து

*898 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாநகராட்சியில் சைக்கிள் வரி ரத்து செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1-4-1972 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மதுரை மாநகராட்சியில் சைக்கிள் வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போன்று மாநிலம் முழுவதும் சைக்கிள் வரியைச் சுமத்தக் கூடாது என்ற சட்டத்தை அரசாங்கம் எல்லா லோக்கல் பாடீஸுக்கும் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாநிலம் முழுவதும் அரசாங்கம் சைக்கிள் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க அவசியம் இல்லை. ஆங்காங்கே சைக்கிள் வரியை வசூல் செய்வதில் பெரிய நகராட்சிகளுக்கு பல சிரமங்கள் இருக்கின்றன. வரியை விட வரியை வசூலிப்பதற்கு செலவு அதிகமாகக் கூடிய நிலை ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட நகராட்சிகளில் சைக்கிள் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பினால் அரசு அதற்கு அனுமதி அளிக்கிறது. பேரூராட்சிகள் இந்த வருமானத்தை இழக்க விரும்பவில்லை. ஆகவே, எந்தெந்த நகராட்சிகள் தீர்மானம் போட்டு அனுப்புகின்றனவோ அவைகளுக்கு மட்டும் அரசாங்கம் அனுமதி அளிக்கிறது